1996 மார்ச் 1] [திரு. டி. ஜெயகுமார்]

அடுத்து, `வாக்கி-டாக்கி'யைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பொறுத்தவரையில், பரிட்சார்த்த முறையாக தூத்துக்குடியிலும் நாகப்பட்டினத்திலும் 125 மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுமையிலும் இருக்கின்ற துறைமுகங்களுக்கு அது கொடுக்கப்படவேண்டும். தமிழகம் முழுமையிலும் இருக்கின்ற துறைமுகங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற நம்முடைய கருத்தை மத்திய மீன்வள வாரியக் கூட்டத்திலே தெரிவித்து இருக்கிறோம். அதற்கு மத்திய அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது அந்த இரண்டு துறைமுகங்களில் உள்ள மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிட்சார்ந்த முறையிலே அது செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அதிலே விவாதம் எல்லாம் இருக்க முடியாது.

(ஆ) ஸ்ரீவைகுண்டம் தொகுதி தாமிரபரணி ஆற்றில் மண் எடுக்கப்படுவதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. ஸ்ரீவைகுண்டம் தொகுதி தாமிரபரணி ஆற்றில் மண் எடுக்கப்படுவதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து திரு.எஸ்.டேனியல்ராஜ் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று கோரி உள்ளார்கள். அதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. திரு.எஸ் டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலே தாமிரபரணி ஆற்றில் கடந்த 20 ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து மணல் எடுக்கப்பட்டு வருகின்ற நிலை இருந்து வருகிறது. தற்போது சில தனியார்கள் தாமிரபரணி ஆற்றிலும், ஆற்றினுடைய கரையிலும் இருந்து தினசரி 100-க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் மணல் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக தாமிரபரணி ஆற்றிலே, ஆற்றின் ஆழம் அதிகமாகி, இன்றையதினம் நீர்மட்டம் குறைந்து, நிலத்தடி நீர் குறைவாகிக் கொண்டிருக்கிற சூழ்நிலை சிதம்பரனார் மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. வறட்சியின் காரணமாக தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இப்போது, தாமிரபரணி ஆற்றிலேதான் வாழவல்லான் 3 எம்.ஜி.டி. குடிநீர் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, அதனுடைய கிணறும், பம்ப் ரூமும்

அமைக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடியிலே இருக்கின்ற தெர்மல் நகர், சிப்காட் தொழிற்சாலைகள் ஆகிய இடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ளவர்களுக்கு அந்தத் திட்டத்தின் மூலமாகத்தான் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மணல் எடுக்கப்பட்டு வருவதன் காரணமாக, இந்தத் திட்டமே அழிந்துவிடுமோ என்ற அச்சநிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, 1992 ஆம் ஆண்டு சிதம்பரனார் மாவட்டத்திலே ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் போது, (மணியடிக்கப்பெற்றது) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே நேரிடையாக வந்து, தாமிரபரணி ஆற்றினுடைய கரைகள் உடைப்பு ஏற்பட்டிருந்த கிட்டத்தட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்ட நிலைகளை எல்லாம் பார்த்தார்கள். முக்காணி, ஆத்தூர், உமரிக்காடு போன்ற கிராமங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் முதலமைச்சரின் வேண்டுகோளின்படி அந்தக் கரைகள் எல்லாம் அந்த நேரத்திலே பொதுப்பணித் துறை மூலமாக மிக வேகமாக சீர்செய்யப்பட்டு, பலப்படுத்தப்பட்டன. இப்படி மண் எடுக்கப்படுகின்ற நேரத்திலே, மழைக்காலங்கள் வருகின்ற போது அந்தக் கரைகளெல்லாம் பலவீனம் அடைந்து, நிச்சயமாக அந்தக் கரைகளெல்லாம் உடைக்கப்படும். நம்முடைய தொழில் துறையைப் பொறுத்தமட்டிலே மண் எடுக்கப்படுகின்ற வருமானம் இருந்தாலும்கூட, வெள்ளம் ஏற்படுகின்ற நேரங்களிலே ஏற்படுகின்ற செலவினங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது நிச்சயமாக செலவினங்கள்தான் அதிகமாக இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே, தற்போது மணல் எடுத்து வருவதற்குத் தாங்கள் அனுமதி வழங்கியிருந்தாலும்கூட அதை உடனடியாக ரத்து செய்யவேண்டும் என்பதையும், தொடர்ந்து யாருக்கும் தாமிரபரணி ஆற்றிலே மண் எடுப்பதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்பதையும் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

நண்பகல் 12.00

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வ.உ. சிதம்பரனார் மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் பகுதியில் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் மண் குவாரி செய்ய தமிழ்நாடு சிறு கனிமங்கள் விதி 36(அ) பிரிவின்படி மூன்று ஆண்டுகள் டெண்டர் முறையில் குத்தகை ஒப்பந்தம் கீழ்கண்ட மூன்று நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டு, அவர்கள் மண் எடுத்து வருகிறார்கள். (1) திருமதி ஆராயி, புல எண் 378-ல் 10 ஹெக்டேர். (2) திரு. சுப்பிரமணியம், புல எண் 378-ல் பி, 10 ஹெக்டேர் (3) திரு. சத்தியமூர்த்தி, புல எண் 89, 1/1-ல் 10 ஹெக்டேர். மேற்குறிப்பிட்ட ஆற்றுப் படுகையில் மணல் எடுக்கக்

குத்தகை வழங்கும்முன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப்பணித் துறையைச் சார்ந்த அதிகாரிகளைக் கலந்தாலோசித்து அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, நீர் நிலைத் தேக்கங்களுக்கும் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் எந்தவிதத்திலும் குந்தகம் விளையாமல் இருக்கும் இடங்களிலேதான் குத்தகை உரிமை வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் மணல் எடுக்க வேறு எவருக்கும் இதுவரை குத்தகை உரிமை வழங்கப்படவில்லை. ஸ்ரீவைகுண்டம் பகுதியில் தாமிரபரணி ஆற்றில் அனுமதிக்கப்படாத பகுதிகளில் சில நபர்கள் அவ்வப்போது கள்ளத்தனமாக மணல் எடுப்பதைக் கண்டுபிடித்து அவர்களிடமிருந்து அபராதத் தொகையாக ரூ.30,450/- வசூலிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, கட்டிடக் கட்டுமானப் பணிகளுக்கு மணல் இன்றியமையாத தேவையாக இருப்பதால் ஆற்றுப் படுகையில் தேவையான மணல் எடுக்கப்படும்போது அதற்கான முன் அனுமதி வழங்கப்படும்முன் ஆற்றுப் பகுதியில் அமைந்துள்ள பாலங்கள், குடிநீர்த் திட்ட ஊற்றுக் கிணறுகள் மற்றும் ஆற்றின் கரை ஆகியவை பாதிக்கப்படாத வகையில் ஒரு பாதுகாப்புத் தூரத்தை 'சேப்ட்டி டிஸ்டென்ஸ்' விட்டுத்தான் பொதுப்பணித் துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் ஆகியோரிடம் இருந்து ஒப்புதல் பெற்றபின்னர்தான் மணல் எடுக்க குத்தகை உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தாமிரபரணி ஆற்றில் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரால் உரிமை வழங்கப்பட்ட நபர்களால் மணல் எடுப்பதால் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கண்காணிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் யாரும் கள்ளத்தனமாக மணல் எடுக்காத வகையிலும், ஏற்கெனவே உரிமம் வழங்கப்பட்டிருப்பவர்கள் அந்த விதியை மீறாத அளவிற்கு, பாலங்களுக்கு சேதம் ஏற்படும் வகையில் மணல் எடுக்காத அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டு தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

4. விதி 110 -ன்கீழ் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை

நில உரிமைப் பதிவேடுத்திட்ட அமல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிவிப்பை வெளியிட அனுமதி கோரியுள்ளார். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.